**செய்தி வெளியீடு எண்: 161** **நாள்: 24.02.2019**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (24.2.2019) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற பிரதம மந்திரியின் கிசான் சம்மான் நிதி திட்டத்தின் முதல் தவணை தொகை வழங்கும் துவக்க விழாவில் ஆற்றிய உரை**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

**பிரதம மந்திரி கிஸான் சம்மான் நிதி திட்ட துவக்க விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.**

இன்றையதினம் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இந்தியா முழுவதும் உள்ள சிறு, குறு விவசாயிகள் மகிழ்ச்சியடைகின்றவிதமாக பிரதம மந்திரி கிஸான் சம்மான் நிதி திட்டத்தை துவக்கி விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமான திட்டத்தை அளித்திருக்கின்றார் என்று சொன்னால் விவசாயிகளின் மீது எவ்வளவு அக்கறை கொண்டுள்ளார் என்பது நன்றாக தெரிகின்றது. அதற்கு மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு சிறு, குறு விவசாயிகளின் சார்பாக, தமிழக மக்களின் சார்பாக எனது இதயபூர்வமான நன்றியை முதலிலே தெரிவித்து கொள்கிறேன்.

இந்த சிறப்பான விழாவிலே சிறந்த முறையிலே உரையாற்றிய
மாண்புமிகு ரயில்வே மற்றும் நிலக்கரித் துறை அமைச்சர்
**திரு. பியுஷ் கோயல் அவர்களே!**
மாண்புமிகு துணை முதலமைச்சர்
**திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!**
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்
**திரு. இரா.துரைக்கண்ணு அவர்களே**!
இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!
தலைமைச் செயலாளர் அவர்களே!
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
பாரதீய கட்சியினுடைய மாநிலத் தலைவர் மரியாதைக்குரிய
டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் அவர்களே!
நிகழ்ச்சியை சிறப்பான முறையிலே ஏற்பாடு செய்திருக்கின்ற
மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய
வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் அவர்களே!

மற்றும் வருகை தந்திருக்கின்ற வேளாண் பெருமக்களே!
பெரியோர்களே! தாய்மார்களே!
கழகத்தின் பல்வேறு பொறுப்புகளில் இருக்கின்ற நிர்வாகிகளே!
கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகளே!
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!
நன்றியுரை ஆற்றவிருக்கின்ற வேளாண்மை இயக்குர் அவர்களே!
உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை தெரிவித்து,

அனைவருக்கும் உணவளிக்கும் உன்னத பணியை செய்து வரும் வேளாண் பெருமக்கள், இந்திய நாட்டின் முதுகெலும்பாக விளங்கி வருகிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசும் தமிழ்நாடு அரசும் வழங்கி வருகின்றன.

சமீபத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில், **“பிரதம மந்திரி கிஸான் சம்மான் நிதி”** என்ற ஒரு புதிய திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. சிறு குறு விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில், விவசாயிகள் தங்கள் நிலங்களில் சாகுபடி செய்யும் பயிர்களுக்கு தேவையான இடுபொருட்களை வாங்கி பயிர் செய்திடவும், அதன் மூலம் அதிக மகசூல் பெற்று தங்கள் பண்ணை வருவாயை பெருக்கிடவும் தேவையான நிதியுதவியை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்படி ரூபாய் **2,000/-** வீதம் **3** தவணைகளாக ஆண்டுக்கு வேளாண் பெருமக்களுக்கு மொத்தம் **6,000/-** ரூபாய் தகுதி வாய்ந்த விவசாய குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்றன.

இந்தியா முழுவதும் உள்ள **2** ஹெக்டேர் அல்லது **5** ஏக்கர் வரையிலான விளை நிலங்களை உடைய சிறு, குறு விவசாய குடும்பங்களுக்கு ஆண்டுக்கு **6,000/-** ரூபாய் வீதம் இந்த திட்டத்தின் வாயிலாக நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்தொகை மூன்று தவணைகளில் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் **2018–19** ஆண்டிற்கு **1.12.2018** முதல் **31.3.2019** வரையிலான முதல் தவணைத் தொகை வழங்கி இத்திட்டத்தை சீரோடும், சிறப்போடும் இன்றையதினம் துவக்கி வைத்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எனது உளப்பூர்வமான நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் மேடையிலே பேசிக் கொண்டிருக்கும்பொழுது, தேனியிலிருந்து ஒருவர், எனக்கு முதற்கட்டமாக ரூபாய் 2 ஆயிரம் என்னுடைய வங்கிக் கணக்கிற்கு வந்துவிட்டதென்று நம்முடைய வேளாண் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அவர்களுக்கு தெரிவித்திருக்கின்றார். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் உத்திரப்பிரதேசத்தில் துவக்கி வைத்த மறு நொடியிலேயே அவருடைய வங்கிக் கணக்கிற்கு அந்தப் பணம் வந்துள்ளது. அதே சமயம் மாநில அளவில், சென்னையில் இந்த திட்டத்தை துவக்கி வைப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டில் உள்ள சுமார் 22 லட்சத்திற்கும் அதிகமான பயனாளிகளின் விபரங்கள் மத்திய அரசின் வலைதளத்தில் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையினால் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில், முறையான சரிபார்த்தலுக்குப் பின் இன்றைக்கு சிறு, குறு விவசாய குடும்பங்களுக்கு மத்திய அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, முதல் தவணையின் முதல் கட்டமாக இன்றே தலா 2,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றது. இன்று வரை, சுமார் ரூபாய் 277 கோடி இதற்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசும் விவசாயிகளின் நலனுக்கு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- ❖ மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட இடையறாத சட்டப் போராட்டத்தின் காரணமாக காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் காவேரியின் மீது தமிழ்நாட்டின் உரிமை தமிழ்நாட்டில் நிலைநாட்டப்பட்டது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.
- ❖ மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்ட தொலைநோக்குத் திட்டம் 2023ல் வேளாண்மைத் துறையில் 40ஆயிரம் கோடி ரூபாய் செலவில், பாசன வசதி கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், ஏரி குளங்களை

தூர்வாருதல், வேளாண் பொருட்களை பாதுகாக்க கிடங்கு வசதிகளை ஏற்படுத்துதல், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை அமைத்தல் போன்றவை அறிவிக்கப்பட்டு, பல்வேறு திட்டங்கள் மூலமாக இவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

❖ நீராதாரங்களை முறையாக பராமரிக்கும் பொருட்டு, 2016–17ஆம் ஆண்டில் குடிமராமத்துத் திட்டத்தை நான் துவக்கி வைத்தேன். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் இது வரை 2,565 பணிகள் 285.79 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ 31.1.2019 வரை நீர்வள ஆதாரத் துறை மூலம் ஒரு கோடியே 61 லட்சத்து 61 ஆயிரத்து 604 கன மீட்டர் வண்டல் படிவுகள், 1 லட்சத்து 17 ஆயிரத்து 632 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதில் 29 பெரிய நீர்த்தேக்கங்களும் முதல் முறையாக பல ஆண்டுகளுக்குப் பிறகு தூர்வாரப்பட்டுள்ளன.

❖ 2016ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நிலவிய கடும் வறட்சியின் காரணமாக, சிறு, குறு விவசாயிகளுக்கு ஏற்பட்ட நிதி நெருக்கடியை தணிக்கும் வகையில், கூட்டுறவு வங்கிகளில் சிறு, குறு விவசாயிகள் பெற்ற ரூபாய் 5,318 கோடி அளவிலான பயிர்க்கடன் மாண்புமிகு அம்மா அவர்களால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

❖ மேலும், 2017ஆம் ஆண்டு வறட்சி நிவாரணமாக 2 ஆயிரத்து 247 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மாவின் அரசால் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த தருணத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

❖ கரும்பு விவசாயிகளின் நலனுக்காக 2017–18 கரும்பு அரவை பருவத்திற்காக மத்திய அரசு அறிவித்த நியாயமான மற்றும் ஆதாய விலையை விட டன் ஒன்றுக்கு 200 ரூபாய் கூடுதலாக, 125 கோடியே 77 லட்சம் ரூபாய் கரும்பு உற்பத்தி ஊக்கத் தொகையாக இது வரை ஒரு

லட்சத்து 35 ஆயிரத்து 890 கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- மேட்டூர் அணை குறித்த காலத்தில் திறக்கப்படாத போது, டெல்டா பாசன விவசாயிகளின் நலனுக்காக 'குறுவை தொகுப்பு திட்டம்' மற்றும் 'சம்பா தொகுப்பு திட்டம்' ஆகியவற்றின் மூலம் பயிர் சாகுபடி செய்வதற்கு நிவாரணம் வழங்கப்பட்டது. டெல்டா விவசாயிகளின் நலனுக்காக தொகுப்பு திட்டம் முதன்முதலில் அறிவித்த முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.
- நுண்ணீர் பாசனத்திற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் வழங்குவதுடன், இக்கருவிகளுக்கான சரக்கு மற்றும் சேவை வரியை முழுமையாக மாநில அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும், இதுவரை இல்லாத அளவாக நடப்பு ஆண்டில் மட்டும் 1 லட்சத்து 43 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் நுண்ணீர் பாசனம் அமைத்திட 950 கோடி ரூபாய் அளவிற்கு பணி ஆணை வழங்கப்பட்டு, இந்த திட்டம் சிறப்பாக தமிழகத்தில்செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு இந்த தருணத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.
- 802 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மானாவாரி சிறப்பு தொகுப்புத் திட்டம் செயல்படுத்தியதும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தான்.
- கூட்டுப் பண்ணைய முறையை ஊக்குவிக்க இரண்டு ஆண்டுகளில் 200 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் 4 லட்சம் சிறு, குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து கூட்டுப் பண்ணையத் திட்டம் செயல்படுத்தியதும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தான்.
- பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் 4,600 கோடி ரூபாய் அளவிற்கு காப்பீட்டு நிறுவனங்களால் காப்பீடு இழப்பீட்டுத் தொகை ஒப்பளிக்கப்பட்டு,

காப்பீடு செய்த 18 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு பெற்றுத் தந்த அரசு அம்மாவினுடைய அரசு.

❖ உரங்கள், வேளாண் கருவிகள் உள்ளிட்ட வேளாண் இடுபொருட்களுக்கு 4 சதவிகித மதிப்புக்கூட்டு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

❖ வேளாண் மற்றும் தோட்டக்கலையில் வேலை வாய்ப்பினை பெருக்கும் விதமாக திறன்மிக்க இளைஞர்களை உருவாக்குவதற்காக 3 வேளாண் கல்லூரிகள், ஒரு தோட்டக்கலை மகளிர் கல்லூரி மற்றும் இரண்டு தோட்டக்கலை பட்டயப் படிப்பு கல்லூரிகளை கடந்த 7 ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசும் துவக்கி உள்ளது என்பதை மகிழ்ச்சியோடு இந்த தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இன்றைக்கு வேளாண் பெருமக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களை செயல்படுத்தியதன் விளைவாக கடந்த 7 ஆண்டுகளில் 5 முறை உணவு தானிய உற்பத்தி 100 லட்சம் மெட்ரிக் டன்னை தாண்டி, மத்திய அரசின் உயரிய விருதான கிரிஷிகர்மான் விருதினை இன்றைக்கு தமிழ்நாடு அரசு தொடர்ந்து 4 முறை பெற்றிருக்கிறது என்பதை இந்த தருணத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, விவசாயிகளுக்கு இன்றைக்கு 10 HP வரை சோலார் மின் மோட்டார் பம்பு செட் வழங்க அறிவிக்கப்பட்டு 90 சதவிகித மானியத்தில் வேளாண் பெருமக்களுக்கு இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த தருணத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

மேலும், கஜா புயலினால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை உள்ளிட்ட 12 மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு நிவாரணமாக 600 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இப்புயலினால் பாதிக்கப்பட்ட

விவசாயிகள் மறுசாகுபடி செய்வதற்கான வாழ்வாதாரத் திட்டம் 228 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்திலுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கும், சிறு, குறு விவசாயிகளுக்கும், வாழ்க்கை முழுவதும் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் 15.8.2005 அன்று தொடங்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் 2011–ஆம் ஆண்டு மீண்டும் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன், வேளாண் பெருமக்களுக்காக பல்வேறு அம்சங்களுடன் புதிய விரிவான முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தினை தாயுள்ளத்தோடு நடைமுறைப்படுத்தினார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் விவசாயிகள் மற்றும் விவசாய குடும்ப உறுப்பினர்களுக்கு கல்வி உதவி, திருமண உதவி, மகப்பேறு உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இயற்கை மரணம் மற்றும் விபத்து ஏற்படும் விவசாயி மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மட்டுமின்றி அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். இந்த திட்டம் தற்போது வெற்றிகரமாக தமிழகத்திலே இன்றைக்கு நடைபெற்று வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, தொழிலாளர், பிற விவசாயத் தொழிலாளர், பிற ஏழை தொழிலாளர்களுக்கு ரூபாய் 2000 வழங்கும் சிறப்பு ஊதியத் திட்டத்தை மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, வேளாண் தொழிலின் உப தொழிலான கால்நடைத் தொழிலை மேன்மைப்படுத்தி, விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் ஈட்டித் தரும் வகையில் சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்டு ரோட்டிற்கு அருகில் தேசிய நெடுஞ்சாலை எண்.79–ஐ ஒட்டி அமைந்துள்ள கால்நடை பராமரிப்புத் துறைக்கு சொந்தமான 900 ஏக்கர் பரப்பில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வள நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை உள்ளடிக்கிய உலகத் தரம் வாய்ந்த ஆசியாவிலேயே பெரிய ஒருங்கிணைந்த பல்துறை

பல்நோக்குடன் கூடிய நவீன கால்நடைப் பூங்கா ஒன்று சுமார் 396 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்பதை சட்டப்பேரவை விதி எண்.110–ன்கீழ் நான் அறிவித்திருக்கின்றேன்.

உலகத் தரம் வாய்ந்த இவ்வளாகம், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில் முனைவோர் மற்றும் நுகர்வோர் பயன்பெறும் வகையில் அனைத்து அடிப்படை வசதிகளும் கொண்ட வளாகமாக அமையும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மரபுத் திறன்மிக்க நாட்டின மற்றும் கலப்பினக் காளைகளைக் கொண்டு ரூபாய் 100 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய உறைவிந்து உற்பத்தி நிலையம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தனது 2019–2020ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்த ‘உறைவிந்து உற்பத்தி நிலையம்’ இந்த வளாகத்திலேயே அமையப்பெறும் என்ற செய்தியை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், வேளாண் விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், வேளாண் பெருமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், வேளாண் பொருட்களை பதப்படுத்தி, மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக தயார் செய்து சந்தைப்படுத்த, தமிழ்நாட்டில் 10 உணவு பதப்படுத்தும் பூங்காக்கள் நிறுவப்படும் என்று மாண்புமிகு அம்மாவின் அரசு அறிவித்து, அதனை செயல்படுத்தத் துவங்கியுள்ளது. முதற்கட்டமாக, விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் ஒரு உணவுப் பூங்கா அமைக்கவும், திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டானில் ஒரு உணவுப் பூங்கா அமைக்கவும் முதற்கட்டப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

மேலும், தனியார் துறையில் உணவு பதப்படுத்தும் தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு, சமீபத்தில் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பிரெஞ்ச் நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இதன் மூலம், தமிழ்நாட்டில் ரூபாய் 2 ஆயிரம் கோடி முதலீடு உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது. இத்தகு உணவு பதப்படுத்தும் பூங்காக்கள் மூலம் வேளாண் பொருட்களுக்கு உரிய நியாயமான விலை கிடைப்பது

மட்டுமல்லாமல், இத்துறையில் வேலைவாய்ப்பும் பெருக வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பிறந்த நாள் விழா. நேற்றையதினம் தமிழ்நாடு இசை மற்றும் கவின் பல்கலைக்கழகத்தின் சார்பாக நடத்தப்பட்ட நிகழ்ச்சியிலே, தமிழ்நாடு இசை மற்றும் கவின் பல்கலைக்கழகத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் திருநாமத்தை சூட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்ததன்படி, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிறந்தநாளான இன்று அறிவிப்பது பொறுத்தமாக இருக்கும் என்று கருதி, இன்றைக்கு தமிழ்நாடு இசை மற்றும் கவின் பல்கலைக்கழகத்திற்கு மாண்புமிகு அம்மாவின் திருநாமத்தால் அழைக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே மிகச் சிறப்பாக, வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இன்றைக்கு அறிவித்திருக்கின்றார்கள். அந்தத் திட்டம், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமான திட்டம். ஏனென்றால், விவசாயிகள் இரத்தத்தை வியர்வையான மண்ணிலே சிந்தி உழைக்கின்றார்கள். சிறு, குறு விவசாயிகள் பல்வேறு காலக்கட்டங்களிலே பாதிப்புள்ளாகின்றார்கள். அதையெல்லாம் கவனத்தில் கொண்டு தான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் சிறு, குறு விவசாயிகளின் நலனை கருதி, இன்றையதினம், மூன்று தவணையாக ரூபாய் **6000** அவர்களுடைய வங்கியிலே செலுத்தப்படும் என்ற அறிவிப்பை தந்து, இன்று உத்திரப்பிரதேசத்திலே தன்னுடைய திருக்கரங்களால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைகின்றவிதமாக இந்தத் திட்டத்தை துவக்கி வைத்திருக்கின்றார்கள். அதற்கு என்னுடைய மனமார, உளமார நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**